**கவனிக்க**.- இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டிற்கான கண்டி மாவட்டத்தின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2502 - 2026 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2026.08.14

2502 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் சட்ட அதிகாரி (நிறைவேற்று அதிகாரி சேவை தரம் III பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2025

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்தில் நிறைவேற்று சேவைத் தரம் III இல் உள்ள சட்ட அதிகாரிகளுக்கான 03 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில், அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட தகுதி யுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகத்தேர்வுக் குழுவால் நடத்தப்படும், தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் குறித்த பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப் படுவார்கள். தகுதியுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகத்தேர்வானது, அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பெண் வழங்கும் நடைமுறையின்படி (இல. : 06 - இன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது) நடாத்தப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்**:

i. **கல்வி/தொழில்முறைத் தகைமைகள்:**

இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

ii. **அனுபவம் :**

விண்ணப்பதாரர்கள், இலங்கை உயர் நீதிமன்றத் தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், சட்டத்தாணியாக குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் செயலாற்றல்மிக்கதொரு தொழில்முறை அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும்.

(இத்தகைய செயலாற்றல்மிக்க தொழில்முறை அனுபவத்தை நிரூபிப்பதற்காக, சேவைக்காலத் தைத் தெளிவாகக் குறிப்பிடும் ஆவணச் சான்றுகள், சான்றளிக்கும் அதிகாரியின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் சான்றளிக்கப்பட்ட திகதியுடன் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

அல்லது

விண்ணப்பதாரர்கள், இலங்கை உச்சநீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பணியாற்றிய அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அத்தகைய அனுபவம், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் ஆகியோரால் சான்றளிக்கப்பட வேண்டும், மேலும், விண்ணப்பதாரர் சட்டத்துறையில் வகித்த பதவி அல்லது பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தகைமைகள் என்ன என்பதையும் அந்தச் சான்றிதழில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு:

அடிப்படைத் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களின் பிரதிகள், விண்ணப்பதாரரால் முறையாகச் சான்றளிக்கப்பட்டு விண்ணப்பத் துடன் இணைக்கப்பட வேண்டும். சேவையின் ஆரம்பத் திகதி மற்றும் நிறைவு திகதி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள். முன்னறிவிப் பின்றி நிராகரிக்கப்படலாம்.

"*சட்டத்துறைப்பதவி*" என்பது அப்பதவிக்கான ஆட்சேர்ப்பின் அடிப்படைத் தகைமையாக சட்டத்துறைப் பட்டம் அல்லது இலங்கை உச்ச நீதிமன்றத்தின்சட்டத்தாணியாகசத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ஆகியவற்றில் ஏதேனும் மூன்று கட்டாயமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பதவியை குறிக்கும்.

III. **உடல் தகுதி :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், அப் பதவியுடன் தொடர்புடைய கடமைகளை திருப்தி கரமாக நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மனநலத் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

IV **ஏனைய தேவைகள் :**

- இலங்கைக் குடிமக்களாக இருத்தல் ;
- மிகச்சிறந்த ஒழுக்கப் பண்புகளைக் கொண்டிருத்தல்;
- விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியின்படி, கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகள், அனுபவம், உடல் தகுதி மற்றும் வயது தொடர்பான அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல்.

3. **வயதெல்லை** :

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியில் இருபத்தொரு (21) வயதுக்குக் குறையாமலும், நாற்பத்தைந்து (45) வயதைத் தாண்டாமலும் இருத்தல் வேண்டும்.

4. **சம்பள விகிதம் :**

25.03.2025 ஆம் திகதிக்குரிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, இப்பதவிக்கான சம்பள அளவிடை, SL1-2025 : ரூ. 82,150.00 - 10 x 2,400 - 8 x 2.940 - 17 x 3,900 - ரூ. 195,970.00 (மாதத்திற்கு) ஆகும். சம்பளம், மேற்கூறிய சுற்றறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த அட்டவணை III இன் விதிகளுக்கு இணங்க வழங்கப்படும்.

5. **சேவைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

i. இப்பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடியது. நியமிக்கப்படுபவர், ஓய்வூதியத் திட்டம் கொள்கை தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு தீர்மானங்களுக்கும் உட்பட்டவர் ஆவார். அதிகாரி, பொருந்தக்கூடிய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் அல்லது தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் அல்லது தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிக்க வேண்டும். மேலும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள அரசாங்க விதிமுறைகளின்படி பரிந்துரைக் கப்பட்ட பங்களிப்புகளைச் செய்ய வேண்டும்.

II. நியமனம் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அதிகாரி, ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி, நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதல் செயற்திறன்காண் வழக்கறிஞர் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.

III. நியமிக்கப்படுபவர், 16.10.2020 ஆம் திகதிக்குரிய 18/2020 ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க, நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகபூர்வ மொழி(களில்) புலமை பெற்றிருக்க வேண்டும்.

IV. இந்நியமனமானது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்றுத்தரச் சேவைப் பிரிவின் சட்ட அதிகாரி பதவி தொடர்பாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் இல. : PSC/EST/5/1/24/2/2012 ஐக் கொண்டதும், 2024.05.31 எனத் திகதியிட்டதுமான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகள், அதில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவிருக்கும் ஏதேனும் திருத்தங்கள், பொது சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஸ்தாபன விதிகோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகள், மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் திணைக்களங்கள்சார் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும்.

V. விண்ணப்பிக்கப்பட்ட மொழி மூலமானது, பின்னர் மாற்றப்படலாகாது. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தின் அடிப்படையில் நியமனத்திற்கான தகுதி நிர்ணயிக்கப்படும்.

6. **தகுதி மதிப்பீட்டிற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்விற்கான மதிப்பெண் வழங்கும் திட்டம் :**

| *தொடரிலக்கம்* | *மதிப்பெண்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுகோல்கள்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1 | **மேலதிகத் தகைமைகள் (Additional Educational Qualifications)** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பெறப்பட்ட முதுகலைப்பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறைப் பட்டபின் படிப்பின் டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக்கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சட்டத்தரணிக்குப் பிந்தைய டிப்ளோமா | 20 | |

<table>
<tr><th>தொடரிலக்கம்</th><th>மதிப்பெண்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுகோல்கள்</th><th>புள்ளிகள்</th><th>அதிகபட்ச புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட சட்ட இளமானிப்பட்டம்<br>• முதல் வகுப்பு சிறப்புத்தேர்ச்சி<br>• இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) சிறப்புத் தேர்ச்சி<br>• இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) சிறப்புத் தேர்ச்சி<br>(ஈ) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதித் தேர்வில் முதல் வகுப்பு தேர்ச்சி<br>இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதித் தேர்வில் இரண்டாம் வகுப்பு தேர்ச்சி<br>குறிப்பு I : விண்ணப்பதாரர் இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதித் தேர்வில் சிறப்புத் தேரிச்சியுடன் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே மேற்கண்ட 05 மதிப்பெண்கள் வழங்கப்படும்.<br>குறிப்பு II : அதியுயர் தகுதிக்கு பட்டுமே மதிப்பெண்கள் வழங்கப் படும்.</td><td>15<br><br>10<br>07<br>05<br>10<br><br>05</td><td></td></tr>
<tr><td>2</td><td>மேலதிகத் தொழில்முறை அனுபவம் :<br>வழக்குரைகளைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகுதல்<br>
<table>
<tr><th>நீதிமன்றம்</th><th>வழக்கு ஆவணங்களைத் தயாரித்தல் / தாக்கல் செய்தல் செய்தல் (ஒரு வழக்குக்கு)</th><th>நீதிமன்றத்தில் ஆஜராவது மற்றும் வாய்மொழி வாதங்கள் (ஒரு வழக்கு)</th></tr>
<tr><td>உயர்நீதிமன்றம்</td><td>03</td><td>04</td></tr>
<tr><td>மேல்முறையீட்டு நீதிமன்றம்</td><td>03</td><td>04</td></tr>
<tr><td>High Court/Commercial High Court/Civil Appellate High Court<br>உயர்நீதிமன்றம் / வர்த்தக மேல் நீதிமன்றம்/ குடியியல் மேல் முறையீட்டு மேல் நீதிமன்றம்</td><td>02</td><td>02</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்/ நீதவான் நீதிமன்றம்</td><td>02</td><td>02</td></tr>
<tr><td>நியாய சபை</td><td>02</td><td>02</td></tr>
</table>
குறிப்பு: விண்ணப்பதாரர்கள், மேற்கண்ட அனுபவத்திற்கான ஆதாரமாக, நேர்முகத்தேர்வின் போது, தொடர்புடைய தீர்ப்புகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களையோ அல்லது வழக்கு நீதிமன்றத்தில் கடைசியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திகதியைக் குறிப்பிடும் தொடர்புடைய வழக்கு ஆவணத்தின் சான்றுறுதிப்படுத்தப்பட்ட நகலையோ சமர்ப்பிக்க வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
</table>

| *தொடரிலக்கம்* | *மதிப்பெண்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுகோல்கள்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 3 | **மொழித் தேர்ச்சி** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை ஒரு முக்கியப் பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் ஆங்கிலத்தில் நிரூபிக்கப்பட்ட தேர்ச்சி<br>**தனிநபர் போட்டிகள்**<br>• முதல் இடம் / சிறந்த வாய்மொழிப் பேச்சாளர் - 12 புள்ளிகள்<br>• இரண்டாம் இடம் -10 மதிப்பெண்கள்<br>• மூன்றாம் இடம்/இதர தகுதி விருதுகள் 08 புள்ளிகள்<br>**குழுப் போட்டிகள்**<br>• முதல் இடம்/சிறந்த அணி 10 புள்ளிகள்<br>• இரண்டாம் இடம் -08 புள்ளிகள்<br>• மூன்றாம் இடம் / இதர தகுதிச்சிறப்பு விருதுகள் -06 புள்ளிகள் | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட ஆங்கிலப் பட்டம், அல்லது மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் SLQF நிலை 3 அல்லது அதற்கு மேற்பட்ட ஆங்கிலப் பட்டம், அல்லது அரசுப் பயிற்சி நிறுவனம் அல்லது அரசுப் பயிற்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் நடத்தப்படும், 1,500 கற்றல் மணிநேரங்களுக்குக் குறையாத ஒரு பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு பெறப்பட்ட ஆங்கிலப் பட்டம். | 10 | |
| | (ஈ) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு முந்தைய இரண்டு (02) ஆண்டுகளுக்குள் பெறப்பட்ட க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஆங்கிலத்தில் விஷேட சித்தி அல்லது எடெக்ஸெல் கேம்பிரிட்ஜ் உயர் தரப் பரீட்சை அல்லது ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தபட்சம் 6.0 புள்ளிகளுடன் ஒட்டுமொத்தமாக 6.5 IELTS புள்ளிகள் பெற்றிருத்தல் அல்லது 79 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL IBT புள்ளிகள், 213 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL CBT புள்ளிகள், அல்லது 500 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL PBT புள்ளிகள் பெற்றிருத்தல். | | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ஆங்கிலத்தில் உயர் சான்றிதழ் அல்லது மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் ஆங்கிலத்தில் SLQF நிலை 2 சான்றிதழ்.<br>**குறிப்பு** : அதியுயர் தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 4 | **தகவல் தொழில்நுட்ப அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில் நுட்பம் அல்லது கணினி அறிவியலை ஒரு முக்கியப் பாடமாகப் பட்டப்படிப்பில் பயின்றிருத்தல் | 10 | |

| *தொடரிலக்கம்* | *மதிப்பெண்கள் வழங்குவதற்கான முக்கிய அளவுகோல்கள்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக் கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், இலங்கை சட்டக் கல்லூரி, அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு தொழில்முறை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தில் பட்டம் | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக் கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு நிறுவனத் திடமிருந்து பெறப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் NVQ நிலை 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா பட்டம். | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக் கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம், இலங்கை சட்டக் கல்லூரி, அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழில் முறை நிறுவனத்தால் நடத்தப்படும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப சட்டத் துறை கற்கைகள் அல்லது பயிற்சித் திட்டங்களை நிறைவுசெய்து பெறப்பட்ட சான்றி தழ்கள் (ஒவ்வொரு சான்றிதழுக்கும் 02 மதிப்பெண்கள், அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்கள் என்ற அடிப்படையில்)<br><br>**குறிப்பு**: மிக உயர்ந்த தகுதிக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப் படும். | 04 | |
| 5 | **நேர்முகத்தேர்வில் செயலாற்றுகை**<br><br>பதவியுடன் இனைக்கப்பட்டுள்ள கடமைகளைத் திறம்பட நிறை வேற்றுவதற்குத் தேவையான பின்வரும் திறன்களை மதிப்பிடு வதற்காக வடிவமைக்கப்பட்ட கேள்விகளுக்கு விண்ணப்பதாரர் அளிக்கும் பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப் படும் :<br><br>• பொது அறிவு மற்றும் புலமைத்திறன் - 05 புள்ளிகள்<br>• சட்டத்துறையில் சமகால முன்னேற்றங்கள் குறித்த அறிவு - 05 புள்ளிகள்<br><br>கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தும் திறன் மற்றும் ஆளுமை - 05 புள்ளிகள் | | **15** |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்:**

- அனைத்து வகையிலும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகுதிகாண் மதிப்பிட்டிற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
- விண்ணப்பதாரர்கள் அனைத்துச் சான்றிதழ்களின் அசல் பிரதிகளையும், விண்ணப்பதாரரால் முறையாகச் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அவற்றின் நகல்களையும் நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும்.
- நேர்முகத்தேர்வில் விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதி செய்வதற்காகப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

  i. ஆட்பதிவுக்கான ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;

  ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்கள், பதிவுத் தபால் மூலம், பின்வரும் முகவரிக்கு 2026.09.14 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும். இறுதித்திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழுப்பு 01.

(ii) இந்த அறிவிப்புடன் ஒரு மாதிரி விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் A4 அளவு தாளில் தயாரிக்கப்பட வேண்டும். அதன் முதல் பக்கத்தில் 1 முதல் 3 வரையிலான விடயங்களும், இரண்டாம் பக்கத்தில் 4 முதல் 8 வரையிலான விடயங்களும், மூன்றாம் பக்கத்தில் 9 முதல் 11 வரையிலான விடயங்களும் இடம்பெற வேண்டும். மேலும், விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை இணைத்துள்ள உறையின் இடது மேல் மூலையில், "சட்ட அதிகாரி, தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்ற வார்த்தைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் பின்வரும் நபர்களில் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும் : ஒரு அரசுப் பள்ளியின் அதிபர், ஓய்வுபெற்ற அரச அதிகாரி, விண்ணப்பதாரர் அமைந்துள்ள மாவட்டத்தின் கிராம அலுவலர், ஒரு சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படைகளின் ஆணையிடப்பட்ட அதிகாரி, பொதுச் சேவை அல்லது மாகாணப் பொதுச் சேவையில் உள்ள ஒரு நிரந்தரப் பணியாளர் தர அதிகாரி, ஒரு பௌத்தக் கோயிலின் தலைமைப் பீடாதிபதி அல்லது தலைமை மதகுரு, அல்லது வேறு ஏதேனும் மத வழிபாட்டுத் தளத்திற்குப் பொறுப்பான, உயர் பதவியில் இருக்கும் ஒரு மதகுரு.

(v) தற்போது அரசாங்க பணியில் அல்லது மாகாண அரசாங்க பணியில் பணியாற்றும் அதிகாரிகள், தாங்கள் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவர் மூலமாகத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

(vi) இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு மாறான விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பங்கள் வந்து சேரும்போது எற்படும் இழப்பு அல்லது தாமதம் தொடர்பான எந்தப் புகாரும் எற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **தவறான தகவல்களை அளித்தல் :**

ஆட்சேர்ப்புக்கு முன்னர் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரரின் வேற்புநிலை இரத்து செய்யப்படும் நியமனத்திற்குப் பிறகு அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் கண்டறியப்பட்டால், அதிகாரி பொருந்தக்கூடிய ஒழுகாற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டு, பணியிலிருந்து நீக்கப்படுவார்.

10. வெற்றிடங்கள் அனைத்தையும், ஒரு பகுதியையும், அல்லது எதையும் திரப்புவதா என்பது குறித்த இறுதித்தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவையே சாரும்.

11. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு ஏற்பட்டால் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்தவோரு விடயமும் அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறை தொடர்பாக எழும் எந்தவொரு பிரச்சினையும் அரச சேவை ஆணைகுழுவால் தீர்மானிக்கப்படுவதோடு, அதுவே இறுதியானது.

அரச சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி,

செயலாளர்.

வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
2026, ஓகத்து.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் சட்ட அதிகாரி (நிறைவேற்றுத்தர சேவை நிலை III) பதவிக்கான திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு 2025**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தைக் கட்டத்தில் எழுதவும்)

சிங்களம் 2/தமிழ் 3/ஆங்கிலம்-04

**குறிப்பு**: விண்ணப்பிக்கும் மொழியை மாற்ற முடியாது.

---

1.0 1.1 முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :......................................................

(சிங்களத்தில்/தமிழில்) ......................................................

1.2 முழுப்பெயர் :......................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) ......................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :......................................................
(சிங்களத்தில்/ தமிழில் உ+ம்: கே.எம்.டீ. பாலசூரிய)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் :......................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) ......................................................

2.0 2.1 நிரந்தர முகவரி :......................................................

(சிங்களத்தில்/ தமிழில்) ......................................................

2.2 நிரந்தர முகவரி :......................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) ......................................................

3.0 3.1 பாலினம் : ஆண் 0 பெண் 1 (உரிய இலக்கத்தை கட்டத்தினுள் இடுக)

3.2 சிவில் நிலை : திருமணமானவர் 1 (உரிய இலக்கத்தை கட்டத்தினுள் இடுக)

திருமணமாகாதவர் 2

3.3 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

3.4 2026.09.14 ஆந் திகதியில் வயது : வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

4.0 தொலைபேசி இலக்கம் : நிரந்தர

: கைப்பேசி

5.0 கல்வித்தகைமைகள் :

5.1 பட்டம் நிறுவனம் திகதி

| பட்டம் | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| .............................. | ....................................... | ............................. |
| .............................. | ....................................... | ............................. |

6.0 உச்ச நீதிமன்ற வழக்கறிஞராகப் பதவியேற்ற திகதி:

6.1 உச்ச நீதிமன்றத்தில் பதவியேற்று 03 வருட அனுபவத்தை நிறைவு செய்த திகதி: ....................................

6.2 அரச நிறுவனமொன்றில் சட்டபூர்வமான பதவியில் 03 வருட அனுபவத்தை நிறைவு செய்த திகதி: .....................

- அடிப்படைத் தகுதிகளை நிரூபிக்கும் சான்றிதழ்கள்/ஆவணங்கள் விண்ணப்பதாரரால் உண்மையானவை எனச் சான்றுறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.0 விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலின் இல: 06-இன் கீழ் உள்ள ஒவ்வொரு தகுதியையும் பெற்றுக்கொண்டமை தொடர்பிலான விபரங்கள்:-

7.1 மேலதிகக் கல்வித் தகைமைகள் : ..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

7.2 மேலதிகத் தொழில்முறை அனுபவம் : ..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

7.3 மொழித் திறன் : ..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

7.4 தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான அறிவு : ..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

* மேலதிகத் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்புவது அவசியமல்லாததோடு, நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிப்பதற்காக அத்தகைய ஆவணங்களைத் தயாராக வைத்திருப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

8.0 நீங்கள் எப்போதாவது, யாதாயினுமொரு குற்றச்சாட்டில் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா?

(ஆம் எனில், விபரிக்கவும்)

..........................................................................................................................................................................

9.0 விண்ணப்பதாரரின் சான்றளிப்பு :

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அனைத்துப் பிரிவுகளும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும், நான் அளித்த இந்த அறிக்கை பொய்யானது எனக் கண்டறியப்பட்டால்,

நியமனத்திற்கு முன்பே நான் தகுதியிழப்புக்கு ஆளாவேன் மற்றும் நியமனத்திற்குப் பிறகு பணிநீக்கத்திற்கு உள்ளாவேன் என்பதை நான் அறிவேன் என்றும், நான் அனைத்து விதிகளையும் கடைப்பிடிப்பேன் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கிறேன்.

....................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :.......................

10.0 விண்ணப்பதாரரின் கையொப்பச் சான்றளிப்பு

............................................................
கையொப்பத்தை சான்றுறுதிப்படுத்தும்
அதிகாரியின் கையொப்பம்

முழுப்பெயர் :……………………………………………………………………………………………………….
பதவி :………………………………………………………………………………………………………
திகதி :………………………………………………………………………………………………………
உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

11.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை: (அரசுப் பணியில் உள்ள அதிகாரிகளுக்கு மட்டும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட திரு./திருமதி/ செல்வி …………………………………………… ………….., இந்த நிறுவனத்தில் பணிபுரிகிறார் என்றும், அவர் வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், அவரது பணியும், வருகையும் திருப்திகரமாக உள்ளன என்றும், அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்றும், இந்தப் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் என்றும் இதன்மூலம் நான் சான்றளிக்கிறேன்.

………………………………………………………………,
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :……………………………………………………………………………………………………….
பதவி :………………………………………………………………………………………………………
முகவரி :……………………………………………………………………………………………………….
திகதி :………………………………………………………………………………………………………
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

08-159

**இலங்கை பொலிஸ்**

இலங்கை பொலிஸின் பொலிஸ் உதவி சேவைக்குட்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2026.07.10 அன்று வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானி இலக்கம் 2497, பகுதி I, துணைப் பகுதி II (அ), “வெளியீடுகள்” என்ற தலைப்பின் கீழ், 15 முதல் 37 ஆம் பக்கங்கள் வரை வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2026.09.14 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ்மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு – 02,
2026, ஓகத்து.

08-199

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**திருத்தம்**

**பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I, II மற்றும் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2024(II) 2025**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.10.10 ஆந் திகதிய 2,458 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I, II மற்றும் III ஆம் வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சை - 2024 (II)” பரீட்சை அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

5.0. இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையவழி (Online) முறையூடாகவே மேற்கொள்ள வேண்டும். இதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இற்குச் சென்று “Apply for Examinations” எனும் இணைப்பை பயன்படுத்தி புதிய விண்ணப்பதாரிகளுக்கு உரிய பரீட்சை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய முடியும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவது 2026.08.15 ஆந் திகதி மு. ப. 8.00 மணி முதல் 2026.09.04 ஆந் திகதி நள்ளிரவு 12.00 வரை மட்டுமே மேற்கொள்ள முடியும் இப்பரீட்சையை 2026, நவெம்பர் மாதத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இதற்கு முன்னர் இப் பரீட்சைக்கு விண்ணப்பம் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு நேரடியாக http://examinationportal.slida.lk/app/applied-exams எனும் இணைப்பின் ஊடாக முறைமைக்குள் நுழைந்து தம்மால் உருவாக்கப்பட்ட பயனர் கணக்கைப் (User Account) பயன்படுத்தி விண்ணப்பித்த விண்ணப்பப் படிவத்தின் நிலை (Application status) பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தயவுடன் அறியத்தரப்படுகின்றது.

அங்கு விண்ணப்பப்படிவத்தின் நிலை பின்வருமாறு காட்டப்படும் :

(i) Apporved - விண்ணப்பப்படிவம் அங்கீகரிக் கப்பட்டுள்ளதால், மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.

(ii) Draft - விண்ணப்பப்படிவத்தில் உள்ள குறை பாடுகள் அல்லது பூர்த்தியாகாத விபரங்களைத் திருத்தி, மீண்டும் சமர்ப்பிக்க (submit) வேண்டும்.

(iii) Reject - விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப் பட்டுள்ளதுடன், முறைமையில் குறிப்பிடப் பட்டுள்ள காரணங்களின்படி.

(a) **பணம் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள்.-** சரியான கொடுப்பனவு தொடர்பான உறுதிப் படுத்தலை (கொடுப்பனவுப் பற்றுச்சீட்டின் புகைப்படம்), மின்னஞ்சலின் தலைப்பில் (Subject) பெயர் மற்றும் நியமன இலக்கத்தைக் குறிப்பிட்டு (உதாரணம் : ஏ. பி. சி. டி. பெரேரா - CS/DOS/00001), doeb2025@slida.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(b) **தவறான பரீட்சையைத் தெரிவுசெய்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்.**- மீண்டும் சரியான பரீட்சையைத் தெரிவுசெய்து புதிய விண்ணப்பப்படிவத்தை முன்னர் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (உதாரணம் : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் II ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்கள் I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும் தெரிவு செய்தல் வேண்டும்.

(c) **பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகள்.**- உரிய பதவி உயர்வைப் பெறாத உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் கீழ் விண்ணப்பிக்க முடியாது.

இந்த புதிய விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் நடைமுறையின் போது ஏற்படும் தொழில்நுட்ப பிரச்சினைகள் தொடர்பில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 011-4513368 மற்றும் 011-4513366 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வினவல்களை மேற்கொள்ள முடியும். இது தவிர பரீட்சை தொடர்பாக வேறு ஏதேனும் விடயங்கள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி உங்களது பிரச்சினைகளைச் சமர்ப்பிக்கவும்.

- நியமன இலக்கம் CS/DOS/00001-CS/DOS/52500 மற்றும் CS/DOS/A/90000 இற்கும் கூடியவை 011-2673560 (2020.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)

- நியமன இலக்கம் CS/DOS/52501-CS/DOS/90000 : 011-2684223

  (2020.01.01 ஆந் திகதியன்று மற்றும் அதற்குப் பின்னர் இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)

02. 2,458 ஆம் இலக்க மற்றும் 2025.10.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றிச் செல்லுபடியாகும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிலை (Application Status) Approved எனக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என அறிவிக்கப்படுகின்றது.

என்.யூ. நிஷாந்த மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை 31.

08-104

---

## இலங்கை புகையிரத திணைக்களம்

## இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026)

இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை தொடர்பில் தகுதி வாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது இலங்கை புகையிரத திணைக்களத்தில் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தரத்திற்காகும்.

1.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதி 2026.09.14 ஆகும்.

குறிப்பு : விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதி திகதி வரை விண்ணப்பத்தினை தாமதிப்பதினால் ஏற்படும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் விண்ணப்பதாரியினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**எழுத்து மூல பரீட்சை :**

இப் பரீட்சையானது கீழ்வரும் இரு வினாத்தாள்களை கொண்டமைந்துள்ளது.

i. நுண்ணறிவுப் பரீட்சை

ii. கிரயம் மற்றும் புள்ளிவிபரவியல்

**பரீட்சை திகதி** – இப் பரீட்சை 2026, செத்தெம்பர் மாதத்தில் நடைபெறும். அப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு மற்றும் இரத்து செய்வதற்கு புகையிரத பொதுமுகாமை யாளருக்கு அதிகாரம் உள்ளது.

02. நியமிக்கப்படும் எண்ணிக்கை 02 ஆகும். இறுதி வெற்றிடத்திற்காக அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றிற்காக சம புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களை விஞ்சி காணப்படும் போது அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் நடைமுறை விதியின் 91ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

3.1 அரச சேவையில் நியமனங்கள் கட்டுப்படுத்தப் படுகின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் PSC/ EST/04-01-43/02/2015 மற்றும் 2016.04.19 ஆம் திகதிவாறு அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தின் சார்ந்த உத்தி யோகத்தர் சேவை பிரிவு தொடர்பில் ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அவ் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மற்றும் இன்னகத்தும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங் களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் சட்டதிட்டங்களுக்கு கீழ் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியொருவர் சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் இன்னகத்தும் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கீழ்படிய வேண்டும்.

3.3 இப் பதவியானது மூன்று வருட தகுதிகூர் நிலை காலத்திற்கு கீழ்படிவானது. இலங்கை புகையிரத போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்களுள் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி யடைய வேண்டும்.

3.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கமைய மற்றும் அதற்கு இடைநேர் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய பதவியில் இணைந்து 05 வருட காலத்தினுள் ஏற்புடைய அரசகரும மொழியில் தேர்ச்சியினை பூர்த்திசெய்தல் வேண்டும்.

3,5 தங்களுக்கு வழங்கப்பட்ட பதவியில் கடமைகளை ஏற்புடைய காலத்தில் பொறுப்பேற்பதற்கு தாங்கள் தவறும் பட்சத்தில் மற்றும் /அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது கைவிடும் விண்ணப்பதாரிகளின் நியமனங் களை இரத்து செய்வதற்கான அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கு உள்ளது.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 உடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் உப அட்ட வணைக்கமைய இப் பதவிற்குரிய சம்பள அளவுதிட்டம் ரூ. 53,060.00 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - ரூபா 94,100.00 ()MN4-2025) ஆகும், அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங் கத்தினால் அவ்வப்போது செலுத்தப்படுகின்ற வேறுபடி களுக்கும் நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள்.

05. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் /அனுபவம் :**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்ட வர்களாய் இருத்தல் வேண்டும்.

iii. இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமையாற்றவும் போதி யளவு உடல் உளசார் தகைமைகளை கொண்ட வராய் இருத்தல் வேண்டும்.

(அ) கல்விசார் தகைமைகள்

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் வணிக, வியாபார முகாமைத்துவம், தகவல் தொழிநுட்பம், பொருளியல், புள்ளி விபரவியல், கிரய முகாமைத்துவம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஏதேனு மொரு பாடத்துடன் பட்டப்படிப்பினை பெற் றிருத்தல்.

அல்லது

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஏதேனும் பாடத்துறையில் பெற்றுக்கொண்ட பட்டப்படிப்புடன் கிரய முகாமைத்துவம் தொடர்பில் 02 வருட அனுப வத்தினை கொண்டிருத்தல்.

**குறிப்பு** – பட்டப்படிப்புச் செல்லுபடியாகும் திகதியானது விண்ணப்பங்களை கோருகின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.

**வயது** :

விண்ணப்பதாரியின் வயது விண்ணப்பத்தினை கோரும் திகதிக்கு இருபத்தொரு வருடங்களை (21) விட குறையாதவாறும் முப்பத்தைந்து (35) வருடங்களை விட விஞ்சாதவாறும் இருத்தல் வேண்டும்.

**வேறு :**

i. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகைமை களும் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில்/ வர்த்தமானியில்/ வலைத்தளத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

ii. எந்தவொரு மத குருமாருக்கும் இந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணபிக்க அல்லது தோற்றுவதற்கு அனுமதி இல்லை

06. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ.1200.00 ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல 176-1001-090-27314 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு வேறொரு பரீட்சை தொடர்பில் மாற்றம் செய்யப்படவும் முடியாது. பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

07. **விண்ணபிக்க வேண்டிய முறை :**

(அ) விண்ணப்பமானது இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் அனைத்து விண்ணப்ப படிவங்களும் A4 அளவிலான கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி, விண்ணப்பத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 2.12 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலானவை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை 03 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும். இதற்காக கணனியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப்படலாம். விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் தமது கையெழுத்திலேயே தெளிவாக நிரப்பப்பட வேண்டுமென்பதோடு மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள், பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண் ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பத்தினை முன் வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரிசிலித்து பார்க்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஏற்புடைய பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர் பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப் பத்தினை நிரப்ப வேண்டும் விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப் படுதல் அத்தியாவசியமாகும்.

(இ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.08.24 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் “இலங்கை புகையிரத திணைக்களத்தின் போக்குவரத்து கிரய

உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை – 2026 என குறிப்பிட வேண்டும். அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
த.பெ. 355,
ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு 10.

(ஈ) விண்ணபத்தில் மற்றும் பரீட்சை தொடர்பிலான நுழைவுச்சீட்டில் விண்ணப்பதாரியின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிப ரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத் தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது ரூ.71,240.00 வினை விஞ்சிய மாதாந்த சம்பளத்தினை பெறுகின்ற நிரந்தர பதவியினையுடைய பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(உ) அனைத்து வகையிலும் பூரணமற்ற விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பமொன்று தொலைதல் மற்றும் தாமத மாதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே அதைப்பற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கை புகையிரத திணைக்களத்தின் www.railway.gov.lk எனும் வலைத்தளத்தில் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறாதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சை யின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவரெனின் அவ் விடயங்களுடன் தொலை நகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதி யொன்றினை அனுப்பி வைக்கக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் வட்ஸ்அப் (Whatsapp) இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு புகையிரத திணைக்களத்திற்கு முன் வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும். மேலும் இலங்கை புகையிரத திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனுமொரு தகவலினை உறுதிபடுத்துவதற்கு நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை, பரீட்சை கட்டணத்தினை செலுத்தி பெறப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியினை மற்றும் விண்ணப்பத்தை தபாலிலிடுகையில் பதிவுசெய்த பற்றுச்சீட்டினை தயாராக தம் வசம் வைத்திருப்பது பயன்தரும்

08. **பரீட்சைக்கு பிரவேசித்தல்** :

(அ) விண்ணபக் கோரல் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோலின் அடிப்படையில் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப் பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் ஏற்புடைய பரீட்சை கட்டணத்தினை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் முறை யாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை முன் வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு புகையிரத பொதுமுகாமையாளரினால் பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்படும். தமது நுழைவுச் சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்ப தாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி யளிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய அனுமதி நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு அப் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளே அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இவ் வர்த்தமானியில் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் புகையிரத பொது முகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப் படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

**குறிப்பு** - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை யினை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப் பட்டதாக கருதப்பட மாட்டாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப் படுத்தல் :**

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு ;

(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள் :**

இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிகளுக்கமைய எவரேனும் விண்ணப்பதாரியொருவர் அதற்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதன் பின்னர் அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படலாம்.

11. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படுமிடத்து அது தொடர்பிலான புகையிரத பொது முகாமையாளரால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்மைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி மூலம் :

(அ) பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிகள் மூலம் நடாத்தப்படும்

(ஆ) விண்ணப்பதாரி தகுதி பெற்ற பட்டபடிப்பினை பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றமளிக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியொருவர் தகுதிபெற்ற பட்டப் படிப்பில் பாடங்களை இரு மொழிகளில் அல்லது அதிக எண்ணிக்கையில் சித்திபெற்றுள்ளார் எனின் அப் பட்டபடிப்பில் அவர் சித்திபெற்ற பாடங்களில் அதிகளவான பாடங்களுக்கு தோற்றிய மொழி மூலம் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றமளிக்க வேண்டும்.

(ஈ) பிரதான பாடங்களை ஒரு மொழியிலும் மேலதிக பாடங்களை வேறோரு மொழியிலும் தேர்ச்சி பெற்றுள்ள விசேட பட்டப்படிப்பினை உடைய விண்ணப்பதாரியொருவர் பிரதான பாடத்தினை தேர்ச்சி பெற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்றமளிக்க வேண்டும்.

குறிப்பு -

i. மேலே (ஆ) மற்றும் (இ) இல் உள்ள தகுதி பெற்ற பட்டப்படிப்பு எனும் பதத்தினால் கருதப்படுவது யாதெனில் 5(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்படிப்பு தகைமையாகும்.

ii. விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

iii. தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது

13. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை** :

13.1 **எழுத்து மூல பரீட்சை :**

கீழ்வரும் பாடங்களை உள்ளடக்கிய 02 வினாத்தாள்களை கொண்டமைந்த எழுத்து மூல பரீட்சை நடைப்பெறும். பாடங்கள் மற்றும் ஒவ்வொவ்வொரு பாடங்கள் சித்தியடைவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு

| *பாடம்* | *அதிக் கூடிய புள்ளி* | *சித்தி பெற பெற்றுக் கொள்ள வேண்டிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 02. கிரயம் மற்றும் புள்ளி விபரவியல் | 100 | 40 |

விண்ணப்பதாரிகள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

எழுத்து மூல பரீட்சைக்கான பாட விதப்புரை

01. **நுண்ணறிவு பரீட்சை :**

விண்ணப்பதாரியின் மொழித்திறன், வாத திறமை, தீர்மானத்தினை மேற்கொள்ளும் ஆற்றல் மற்றும் கணித திறமையினை பரீட்சிக்கக்கூடிய வகையில் பல்வினா மற்றும் குறுகிய விடைகளை வழங்கும் மாதிரியில் 50 வினாக்களை கொண்ட வினாப் பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். (காலம் 01 மணித்தியாலயம்)

02. **கிரயம் மற்றும் புள்ளிவிபரவியல் :**

விண்ணப்பதாரிகளின் ,

I. முகாமைத்துவ தீர்மானங்களை மேற் கொள்கையில் கிரய முறைகளை பயன் படுத்துதல்

II. பொருள் உழைப்பு மற்றும் பொது விடய கிரயத் தினை இனங்காணல்

III. பகுப்பாய்வு செய்தல்

IV. மாறும் கிரயம்,நிலையான கிரயம், நேர் மற்றும் மறைமுக கிரயம், நீண்ட கால மற்றும் குறுகிய கால கிரயம்,பொருளாதார கிரயம் போன்ற கிரய முறைகள் மற்றும் கிரய கோட்பாடுகளை பயன்படுத்துதல்

V. முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ள மற்றும் கிரய மற்றும் நிதி பகுப்பாய்வு தொடர்பில் புள்ளிவிபரவியல் தகவல்களை வழங்குதல்

VI. தகவல்களை திரட்டல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் புள்ளிவிபரவியலை எதிர்வுகூறக்கூடிய அறிவினை பரீட்சிப்பதற்கான குறுகிய விடையளித்தல் மற்றும் கட்டமைப்பு வினாப் பத்திரமாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.(காலம் 03 மணித்தி யாலங்கள்)

13.2 **கட்மைக்கப்பட்ட நேர்முக பரீட்சை**

I. எழுத்து மூல பரீட்சைகளில் சித்தி பெறுகின்ற விண்ணப்பதாரிகளின் திறமை முறைக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இருமடங்கு எண்ணிக்கைக்கு சமமான அளவில் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தி அதில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட முறைக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

ii. கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை மண்டலமானது புகையிரத பொதுமுகாமை யாளரினால் நியமிக்கப்படுவதுடன் அப் பரீட்சை நடைப் பெறும் திகதி புகையிரத பொதுமுகாமையாளரினால் தீர்மானிக்கப் படும்.

iii. அங்கு புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் கீழ்வருமாறு :

| | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதிக்கூடிய புள்ளி அளவு* |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வி தகைமைகள் | 10 |
| 02 | தொழிற்சார் தகைமைகள் | 20 |
| 03 | அனுபவம் | 25 |
| 04 | தகவல் தொழிநுட்பம் தொடர்பிலான அறிவு | 20 |
| 05 | ஆங்கில மொழி புலமை | 20 |
| 06 | நேர்முக பரீட் சையில் வெளிகாட்டுகின்ற திறமை | 05 |
| | மொத்த புள்ளிகள் | 100 |

குறிப்பு – அனுபவத்தின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும் போது 5(அ)(ii) இன் கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற போது ஆட்சேர்ப்பிற்காக கவனத்திற் கொள்ளப் படுகின்ற 02 வருடத்திற்கு மேலதிகமான அனுபவத் திற்கு மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை யில் புள்ளிகள் வழங்கப்படுகின்றன,

கருத்திற் கொள்ள வேண்டியவை :- கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு பங்கேற்பது நியமனம் வழங்குவதற்கான தகைமையினை பூர்த்தி செய்வதாக கருதப்பட முடியாது

14. பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரி களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக் கப்படுவதற்கோ அல்லது www.railway.gov.lk எனும் வலைத்தளத்தில் பகிரங்கப்படுத்துவதற்கோ இலங்கை புகையிரத திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. சிங்கள மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்

ரவிந்திர பத்மபிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்,
இல 355, ஓல்கோட் மாவத்தை,
கொழும்பு 10,
2026.07.29.

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தில் சாரந்த உத்தியோகத்தர் சேவை பிரிவில் போக்குவரத்து கிரய உத்தியோகத்தர் பதவியில் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2026)**

1.0 மொழி

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி மூலத்திலேயே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.)

2.0 தனிப்பட்ட தகவல்கள்

2.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

..............................................................................................................................

(உதா- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA KARUNARATHNE)

2.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்)

..............................................................................................................................

2.3 முதலெழுத்துக்களுடன்பெயர்

(உதா- KARUNARATHNE H.M.S.K.)

2.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்).

..............................................................................................................................

2.5 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

..............................................................................................................................

(நுழைவுச்சீட்டுக்கள் இவ் முகவரிக்கு தபாலிடப்படும்)

2.6 பெண்/ஆண் பால் (ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

பெண் - 1
ஆண் - 0

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.8 விவாகமானவர்/விவாகமாகாதவர் (ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.9 இனம் (சிங்களவர்-1/இலங்கை தமிழர்- 2/ இந்திய தமிழர் 3 /முஸ்லிம்கள்-4/வேறு5
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2.10 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

2.11 விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

2.12 கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.0 பட்டம் பெற்ற திகதி : ..........................................................................................................

பல்கலைக்கழகம் /நிறுவனம் : ..........................................................................................................

பதிவு எண் : ..........................................................................................................

உள்வாரி/வெளிவாரி : ..........................................................................................................

பட்டப்படிப்பு : ..........................................................................................................

பாடங்கள் : ..........................................................................................................

வகுப்பு : ..........................................................................................................

மேல்/கீழ் : ..........................................................................................................

பட்டம் செல்லுப்படியாகும் தினம் : ..........................................................................................................

பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலம் : ..........................................................................................................

4.0 பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் :

i. கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை ..................................................................

ii. செலுத்தப்பட்ட பணத் தொகை ..................................................................

iii. செலுத்தப்பட்ட திகதி ..................................................................

| |
|---|
| பணவைப்புப் சீட்டின் முதற் பிரதியை இங்கு ஒட்டவும்.<br>(பண வைப்புப் சீட்டின் நகற்பிரதியை தம் வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்) |

5.0 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த மற்றும் விசுவசிக்கின்ற வரையில் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பணவைப்புச் சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டிருப்தையும் அறியத் தருகின்றேன். பரீட்சை சட்டதிட்டங்களுக்கு இணங்கி செயற்படவும் இப் பரீட்சைத் தொடர்பிலான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள சேவை அமைப்பிற்கமைய பொருத்தமற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ அல்லது அது நடைபெறுகையில் தெரியவருமிடத்தினை தொடர்ந்து பரீட்சைக்கான எனது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்படிவதையும் இத்தால் நான் அறியத் தருகின்றேன்.

..................................................................

திகதி : ................................................. விண்ணப்பதாரியின் கையொப்பம்

6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள ...........................................................................(முழுப் பெயர்) அவர்களை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும் பரீட்சை கட்டணம் முறையாக கட்டப்பட்டுள்ளது என்பதையும் அப்பற்றுச் சீட்டு முறையாக ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் ................................................ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : .........................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : .......................................................................................
பதவி : ..........................................................................................................................................................
முகவரி : .......................................................................................................................................................
(உத்தியோகபூர்வ இலட்சினையை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

7.0 திணைக்கள பிரதானியின் உறுதிப்படுத்தல் (அரச/உள்ளூராட்சி/அரசகூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மாத்திரம்)

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு./திருமதி/செல்வி ............................................ அவர்கள், இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/நிறுவனத்தில்........................ ஆக சேவை புரிவதோடு, அவரது விண்ணப்பத்தினை பரிந்துரை முன்வைக்கிறேன். இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

...................................................................
நிறுவன பிரதானியின் கையொப்பம்

பெயர் : ...................................................................................
பதவிப் பெயர் : .................................................................
திகதி : .....................................................................................
(உத்தியோகபூர்வ இலட்சினையை கொண்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

08-120

---

## இலங்கைப் பரீட்சை திணைக்களம்

## கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ்ப் பரீட்சை - 2026

**ஒழுங்குகளும் பாடத்திட்டமும்**

01. 2024 மற்றும் 2025 ஆண்டுகளுக்கான கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ்ப் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை 2026 நவம்பர் மாதம் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையம் :**

அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ள எல்லா மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண் ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப் படும். எனினும் ஒரு நகரத்தில் போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை காணப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரிகள் அந்நகரத்துக்கு அருகாமையிலுள்ள வேறு பரீட்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவர்.

03. **மொழி மூலம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறுவதோடு ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

04. **தகுதிகள்** :

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் எல்லா விண் ணப்பதாரிகளும் பின்வரும் தகுதிகளில் ஏதாவது ஒரு தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப் படும் கத்தோலிக்க மறை ஆசிரியர் இறுதி சான்றி தழ்ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மறை ஆசிரியர் பரீட்சை அல்லது மறை ஆசிரியர் சிறப்புப் பரீட்சை அல்லது மறை ஆசிரியர் கௌரவ பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப் படும் க.பொ.த. (உ. தரப்) பரீட்சையில் கிறிஸ்தவ திருமறை அல்லது கிறிஸ்தவ நாகரீகம் என்னும் பாடங்கள் இரண்டில் ஒன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.4 கத்தோலிக்க திருமறைப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கத்தோலிக்க திருமறைப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது தேசிய பொதுக் கல்வி சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கத்தோலிக்க மறைப்பாடசாலையில் ஒரு வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்ற மறையாசிரியராக இருத்தல்.

குறிப்பு : இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளும் மேற்கூறிய 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்படும் தகுதிகளில் ஒன்றை யேனும் பெற்றிருப்பதாக கிறிஸ்தவ சமய விவகார திணைக்களத்தில் அனுமதி பெற்ற கத்தோலிக்க மறைப்பாடசாலை அதிபர் அல்லது பங்குக் குருவானவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விண் ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 05. விண்ணப்பித்தல் :

5.1 பதிவுசெய்யப்பட்ட மறைப் பாடசாலை அதிபர் கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலமாக தற் போது மறைப் பாடசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ள அதேவேளை www.doenets.lk இணையத்தளத்தினூடாகவும் தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வசதிகள் மேற் கொள்ளப்பட் டுள்ளன.

5.2 யாரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்ற இட மளிக்கப்படமாட்டாது. ஆயினும் பந்தி 4 இல் காணப்படும் தகுதிகள் பெற்றுள்ள யாரேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்துக்கு அருகாமையில் உள்ள மறைப் பாடசாலை மூலம் ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தல் அனைத்தும் மறைப்பாடசாலை அதிபருக்கும் பெற்றுக் கொடுக் கப்படும்.

5.3 விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பதாரியின் பெயர்களை எழுதும்போது பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறே எழுதப்படுவதோடு, பரீட்சைப் பெறுபேறு பெற்றுக்கொண்ட பின்னர் பெயர் திருத்தத்துக்காக கோரப்படும்போது அச்சுப் பிழை தவிர்ந்த வேறு எவ்வித கோரிக்கை களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவம் தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக் கப்படும்.

5.4 மறைப் பாடசாலை கணனி இலக்கம், முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படவேண்டிய தோடு மறைப் பாடசாலை முகவரி மாற்றம் அடைந்திருப்பின் அதனை அறியத் தருவதோடு மறைப்பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தையும் தருக.

5.5 விண்ணப்பதாரிகள் உரிய தகுதிகளைப் பெற் றிருப்பது தொடர்பில் விண்ணப்பப் படிவங்களை சான்றுப்படுத்தும் மறைப்பாடசாலை அதிபர் அல்லது குருவானவர் பொறுப்பேற்க வேண்டும்.

5.6 2026, செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி விண்ணப்பப் படிவங்களை ஏற்கும் இறுதித் திகதி யாகவுள்ள அதேவேளை அன்றைய தினம் அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்புக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

## 06. பரீட்சைக் கட்டணம் :

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும் முதல் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. குறைவான பெறுபேற்றை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் ஒரு பாடத் துக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்:

குறிப்பிட்ட மறைப் பாடசாலை அதிபர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரிகளிடமும் பரீட்சைக் கட்டணம் சேகரிக்கப்பட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வரவிலிடுமாறு இலங்கையின் எந்த ஒரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும். (பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளது.)

6.2 எக்காரணத்தை முன்னிட்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைக்காக மாற்றுவதோ அல்லது மீண்டும் திரும்பக் கொடுப்பதோ இடம்பெறாது.

07. **அனுமதிப்பத்திரம் :**

பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் எல்லா விண்ணப்பதாரிகளுக்குமான அனுமதிப்பத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் மறைப்பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பமிட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தனது அனுமதிப் பத்திரத்தை ஒப்படைக்காமல் இருந்தாலோ அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலோ அவருடைய பரீட்சை விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7.2 அனுமதிப்பத்திரத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது மறைப்பாடசாலை அதிபரால் அல்லது மி~னுக்குப் பொறுப்பான குருவால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடாத்த 07 நாட்களுக்கு முன் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலை அதிபர் மூலம் அது பற்றி தாமத மின்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அறியத்தரவும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியுடன் கீழ் காணும் விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

1. பரீட்சையின் பெயர்:
2. மறைப்பாடசாலையின் பெயர்:
3. மறைப்பாடசாலையின் முகவரி:
4. மறைப்பாடசாலையின் கணனி இலக்கம்:
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:
6. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் / நகரம்:

08. **ஆள் அடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்துக்குள் தான் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறு பரீட்சை விண்ணப்பதாரி ஆள் அடை யாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சை நிலையத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை நிலையத் தினுள் அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அவ்விடத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சகர்களுக்கு பரீட்சார்த்தியை இனங்காணக்கூடிய வகையில் விண்ணப்பதாரி முகத்தையோ இரு காதுகளையோ மறைக்கும்படி எதுவும் அணியக்கூடாது.

09. **சித்தியடைந்தமையைத் தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுதலும் :**

9.1 இப்பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை ஐந்து ஆவதோடு, பரீட்சையில் முழு சித்தியடைவதற்கு பரீட்சார்த்தி ஒருவர் அப்பாடங்கள் ஐந்திலும் சித்தியடைய வேண்டும். எவ்வாறாயினும் ஒரே தடவையில் உரிய பாடங்கள் ஐந்தில் ஒன்று மாத்திரம் சித்தியடையவில்லை எனின், அது குறை சித்தியாகக் கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து அடுத்த மூன்று பரீட்சை வருடங்களுக்குள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத பாடத்துக்கான பெறுபேற்றை சீர்செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு குறை சித்தி பெற்ற மாணவர்கள் மீண்டும் பரீட்சை எழுதும்போது சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரமே பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படும்.

9.2 எல்லா பாடத்திலும் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் உரித்தாவதோடு சித்தியடையும் தரங்களுக்கு புள்ளிகளின் வீச்சும் குறியீடும் பின்வருமாறு,

| *புள்ளிகள் வீச்சு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0 - 34 | சித்தியில்லை | F |
| 35 - 54 | சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | உயர் திறமை சித்தி | D |

9.3 விண்ணப்பதாரியின் பெறுபேற்றுப் பட்டியல் உரிய மறைப்பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ் :**

இப்பரீட்சையில் சித்திபெறும் அனைத்து விண்ணப்ப தாரிகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வெளியிட ஒழுங்கு செய்யப்படும். உரிய சான்றிதழ் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் மறைப்பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சையில் சித்தியெய்தி, சான்றிதழ் கிடைக்காத எவரேனும் இருப்பின் அது தொடர்பாக மறைப்பாடசாலை அதிபர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு கடிதம் மூலம் கேட்டறிய முடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

மறைப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளின்படி மாத்திரம் விடைத்தாள்கள் மீள்பரிசீலனைக்கு உட் படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளி யிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடுவதனால், அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத்தாளை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

12. **பரீட்சை பற்றிய விபரம் :**

இப்பரீட்சை ஐந்து (05) வினாப்பத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமுரிய காலம் மூன்று (3) மணித்தியாலங்கள் ஆகும். அவ்வினாப்பத்திரங்கள் பின்வருமாறு அமையும்.

1. திருவிவிலியம்
2. திருவழிபாடும் அருளடையாளங்களும்
3. திருச்சபை வரலாறு (உலக, இலங்கை திருச்சபை வரலாறு)
4. மறைக்கல்வி
5. திருச்சபையின் சமூக கொள்கைதிரட்டு (திருச் சபையின் படிப்பினைகள்)

13. **வினாத்தாள் கட்டமைப்பு :**

- ஒவ்வொரு வினாப்பத்திரமும் பகுதி I, பகுதி II, பகுதி III என மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I சுருக்கமான விடையளிக்கும் 10 வினாக் களைக் கொண்டதோடு எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்குரிய புள்ளிகள் 04 ஆகும். (04 × 10 = 40 புள்ளிகள்)
- பகுதி II ஐந்து கட்டமைப்பு வினாக்களைக் கொண்டது. அவற்றுள் விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கான புள்ளிகள் 12 ஆகும்.

  (12 × 4 = 48 புள்ளிகள்)
- பகுதி III இரண்டு (02) கட்டுரை வினாக்களைக் கொண்டது. அவற்றுள் விரும்பிய ஒரு வினாவிற்கு விடையளித்தல் வேண்டும். இப்பகுதிக்கான புள்ளிகள் 12 ஆகும்.

  (12 × 1 = 12 புள்ளிகள்)

14. **பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும்:**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ள கத்தோலிக்க மறை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டமும் மாதிரி வினாத்தாளும் “பணிப்பாளர், தேசிய மறைக்கல்வி நிலையம், பல்கம் பிளேஸ், கொட்டா வீதி, கொழும்பு 08” என்னும் முகவரியின் கீழ்ப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது 011 2685459 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளலாம்.

15. இந்த ஒழுங்குகள், பாடத்திட்ட பத்திரம் ஆகிய வற்றில் காட்டப்பட்டுள்ள விதிகளின்படி செயற்பட எல்லா பரீட்சை விண்ணப்பதாரிகளும் கடமைப் பட்டுள்ளவராவதோடு இந்த ஒழுங்குத் திட்டங்களில் தரப்படாத ஏதேனும் விடயம் தேவைக்கேற்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

16. சிங்களம் - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் இந்த அறிவுறுத்தல்களில் மொழி மூலங்களில் ஏதேனும் பொருத்தமின்மை காணப்படின் சிங்கள மொழி மூலமான அறிவுறுத்தலின்படி செயற்படவும்.

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்ல, பலவத்த,
2026, ஓகத்து 14.

**அட்டவணை 01**

| *மாவட்ட / நகர இலக்கம்* | *மாவட்டம் / நகரம்* |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கம்பஹா |
| 03 | களுத்துறை |
| 04 | கண்டி |
| 05 | மாத்தளை |
| 06 | நுவரேலியா |
| 07 | காலி |
| 08 | மாத்தறை |
| 09 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | திருகோணமலை |
| 18 | குருநாகல் |
| 19 | புத்தளம் |
| 20 | அநுராதபுரம் |
| 21 | பொலன்னறுவை |
| 22 | பதுளை |
| 23 | மொணராகலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை |

08-200

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இந்து தர்மாசிரியர் பரீட்சை – 2026

01. 2026 ஆம் வருடத்திற்கான இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கென பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை 2026 நவெம்பர் மாதம் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையங்கள்** :

இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், குறித்த மாவட்டத்தில் போதியளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில், அம்மாவட்டத்தின் பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரிகள், அதற்கு அருகில் அமைக்கப்படும் வேறொரு பரீட்சை நிலையத்திற் தோற்றுமாறு கோரப்படுவார்.

03. **மொழிமூலம் :**

இப்பரீட்சை தமிழ்மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

04. **தகைமை** :

இப்பரீட்சைக்கென விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒரு தகைமையேனும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.1 அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

4.2 பண்டிதர் பட்டம் பெற்றிருத்தல்

4.3 சைவப்புலவர் பட்டம் பெற்றிருத்தல்

4.4 கல்விப் பொதுத்தராதர (உயர்தரப் பத்திர) பரீட்சையில் இந்துசமயம், இந்துநாகரீகம் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு சித்திபெற்றிருத்தல்.

4.5 சைவநெறிப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரியும்; மேற்குறித்த 4 ஆம் பிரிவிற் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார் என அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

05. **விண்ணப்பித்தல் :**

5.1 விண்ணப்பதாரி ஒருவருக்கு, வெளிவாரி விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படமாட்டாது. எனினும், 4 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டுள்ள விண்ணப்பதாரி ஆயின், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அறநெறிப் பாடசாலை ஒன்றினூடாக பரீட்சைக் கட்டணமாக ரூபா 200.00 ஐச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான அனைத்து அறிவுறுத் தல்களும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.2 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரி யர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

5.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் ……………….. ஆகும்.

5.4 விண்ணப்பப்படிவங்களில், விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கும்போது, பிறப்புச் சான்றிதழிற் பதிவிடப்பட்டுள்ளவாறே பெயர்கள் அமைய வேண்டும் என்பதோடு, பெறுபேறுகள் வழங்கப்பட்ட பின்னர் பெயர்களை திருத்துமாறு கோரப்படும்போது அச்சுப்பிழைகள் தவிர்ந்த வேறு கோரிக்கைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் பூரணப்படுத் தப்படல் வேண்டும். அவ்விதம் அமையாத விண் ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.5 அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம், மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப் பிடப்படுவதோடு, அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத் தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளத்தக்க தொலைபேசி இலக்கமொன்றும் குறிப்பிடப்பட வேண்டும்.

5.6 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் தொடர் பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர் பாகவும், விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் உறுதிப்படுத்த அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப் பட வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம்:**

இப்பரீட்சைக்குரிய கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப் பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக் களிக்கப்படும். நூனசித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்குரிய அனைத்து விண்ணப்பதாரிகளின் முழுத் தொகையையும், இலங்கைப்பரீட்சைத் திணைக் களத்தின் வருமானத்தலைப்பு இல 20-03-02-13 இற்குச் செலுத்தத்தக்கதாக, நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்வதோடு, அதனை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். (பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதி ஒன்றைப் பேணிக்கொள்வது பயனளிப்பதாகும்) எக் காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக்கெனச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீளப்பெறவோ இயலாததாகும்.

07. **அனுமதி அட்டை:**

பரீட்சைக்கு இணைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயத்தின் மூலம் அனுமதிஅட்டை உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் ஊடாக விநியோகிக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளும், தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமக்குரிய அனுமதிஅட்டையில், தமது ஒப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்டு பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர், தமது அனுமதிஅட்டையை ஒப்படைக்காது இருப்பின் அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தனால் தமக்கென நியமிக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை தலைமை ஆசிரியர் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதிருப்பின் உரிய அறநெறிப் பாடசாலைத் தலைவர் மூலம்

அது தொடர்பாக, தாமதமின்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பிய பதிவுச்சிட்டையின் பிரதியுடன் கீழ்க்குறித்த விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பரீட்சையின் பெயர் :
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் :
3. அறநெறிப் பாடசாலையின் முகவரி :
4. அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம்:
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் முகவரி :
6. விண்ணப்பதாரியின் முகவரி :
7. விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :
8. அறநெறிப் பாடசாலை அதிபரின் தொலைபேசி இலக்கம் :
9. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் / மாவட்டம்:

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

8.1 தேசிய அடையாள அட்டை

8.2 செல்லுபடியான கடவுச்சீட்டு

8.3 செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அங்ஙனம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட் செல்ல அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியே செல்லும்வரை பரீட்சை மேற் பார்வையாளர் பரீட்சார்த்தியை அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைப்பதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

09. சித்தி தொடர்பாகத் தீர்மானித்தலும் பரீட்சை பெறு பேறுகளை வெளியிடலும்:

இப்பரீட்சைக்குரிய பாடங்கள் ஐந்து ஆகும். பரீட்சையிற் சித்திபெறுவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் குறித்த ஐந்து பாடங்களிலும் சித்திபெற வேண்டும். எனினும், ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். இத்தகைய பரீட்சார்த்திகள், பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்துவரும் மூன்று தடவைக்குள் நூன சித்திபெற்ற பாடத்திற்குத் தோற்றி, அக்குறித்த பாடத்தில் சித்தி பெறுவதன் மூலம் பெறுபேற்றினைப் பூரணப்படுத்திக் கொள்ள முடியும். நூன சித்திபெறும் பரீட்சார்த்திகள், தமது சித்தியைப் பூரணப்படுத்திக் கொள்ள கட்டாயமாக நூன சித்தி பெற்ற பாடத்திற்காக மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். நூன சித்திக்கென விண்ணப்பிக்கும்போது, ஏனைய பாடங் களுக்காகத் தோற்றிய வருடம், பரீட்சை இலக்கம், தோற்றிய பாடங்கள், பெற்ற தரம் என்பவை குறிப்பிடப் படல் வேண்டும்.

9.1 ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்திபெறும் தரத்திற்கு உரிய புள்ளி வரம்புகள் மற்றும் குறியீடுகள் கீழ்வருமாறு:

| *புள்ளிகள் வீச்சு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0 - 34 | சித்தியில்லை | F |
| 35 - 54 | சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | உயர் திறமை சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல், குறித்த அறநெறிப் பாடசாலை அதிபருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. **சான்றிதழ் :**

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றபோதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி ஒருவர், அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

எனும் முகவரிக்கு அறிவித்து விபரத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சை முடிவுகள் வெளியாகி 14 தினங்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் / பொறுப்பாசிரியர் கோரியிருப்பின் விடைத்தாள் மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதற்கான கட்டணத் தொகை ஒவ்வொரு தடவையிலும் மாற்றம்பெற வாய்ப்பு உள்ளது. எக்காரணத்தை முன்னிட்டும், பரீட்சார்த்திகளுக்கோ அன்றி அவர்களது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை சோதித்தறிய வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

12. **பாடத்திட்டம்:**

இப்பரீட்சை ஐந்து வினாத்தாள்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும். வினாப்பத்திரங்கள் பின்வருமாறு :

1. வேதங்களும் ஆகமங்களும்
2. சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
3. சைவசமய வரலாறு
4. பன்னிரு திருமுறைகள்
5. கோயில்களும் கலைகளும்

ஒவ்வொரு வினாப்பத்திரங்களும் பகுதி I, பகுதி II, பகுதி III என அமையும்.

பகுதி I இல் மொத்தமாக இருபது வினாக்கள் கொடுக்கப்படும். இருபது வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும். ஒரு வினாவிற்கு இரண்டு புள்ளி வீதம் மொத்தம் நாற்பது புள்ளிகள் வழங்கப்படும். (20 x 2 = 40)

பகுதி II, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். (15 x 2 = 30)

பகுதி III, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். (15 x 2 = 30)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள இந்து தர்மாசிரியர் சான்றிதழ் பத்திரப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் இணைப்பு - 2 இல் காட்டப்பட்டுள்ளது.

13. இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருக்கும் அதேவேளை, இந் நிபந்தனைகளிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவிற்கேற்பத் தீர்மானிக்கப் படுவனவாகும்.

14. தமிழ்மொழி மூலம் மாத்திரமே அறிவுத்தல்கள் வெளியிடப்படும் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்லை, பெலவத்த,
2026, ஓகத்து 14.

இணைப்பு – 01

| *மாவட்ட/நகர இலக்கம்* | *மாவட்டம்/ நகரம்* |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கம்பஹா |
| 03 | களுத்துறை |
| 04 | கண்டி |
| 05 | மாத்தளை |
| 06 | நுவரெலியா |
| 07 | காலி |
| 08 | மாத்தறை |
| 09 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | திருகோணமலை |
| 18 | குருநாகல் |
| 19 | புத்தளம் |
| 20 | அநுராதபுரம் |
| 21 | பொலன்னறுவை |
| 22 | பதுளை |
| 23 | மொணராகலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை |

**இணைப்பு – 02**

**இந்து தர்மாசிரியர் பரீட்சை**

வினாப்பத்திரம் 1 இற்கான பாடத்திட்டம்

**வேதங்களும் ஆகமங்களும்**

இந்து சமயத்துக்கு மூலாதாரங்களான வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைப் பற்றியதாக இவ் வினாப்பத்திரம் அமையும். கீழ்வரும் விடயங்கள் முக்கியமானவை.

1. வேதங்களும் அவற்றின் பிரிவுகளும் : சங்கிதை, பிரமாணம், ஆரண்யகம், உபநிடதம்
2. வேதகால ரிஷிகளும், முனிவர்களும்
3. வேதங்கள் வர்ணிக்கும் தேவர்கள்
4. வழிபாட்டு முறைகள்.
5. வேதங்களில் ஒழுக்கம், நீதி பற்றிய சிந்தனைகள்
6. வேதகாலச் சமுதாயம்
7. வேதங்களும், இந்து சமயக் கிரியைகளும், சடங்குகளும்
8. உபநிடதச் சிந்தனைகள் : பிரம்மம், ஆத்மா, வினைப்பயன், மறுபிறப்பு
9. ஆகமங்களின் விளக்கமும் பொருளடக்கமும்
10. ஆகமங்களும் ஆலய வழிபாடும்

**வினாப்பத்திரம் 2 ற்கான பாடத்திட்டம்**

**சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்**

இந்து சமயத்தின் நெடுங்கால வரலாற்றில் உள்ள பல்வேறு கட்டங்களில் அதனை அபிவிருத்தி செய்வதிலும் மேன்மைப்படுத்துவதிலும்பங்குகொண்டரிஷிகள்,ஞானிகள், பாவலர்கள், தத்துவதரிசிகள் சமய இலக்கியங்களின் தலைவர்கள் முதலியோரைப் பற்றிய தெளிவான அறிவைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளுமாறு செய்வதே இப் பாடத்தின் குறிக்கோளாகும். கீழ்வரும் விடயங்கள் சிறப்பான கவனத்தைப்பெறும்.

1. ஆதி சங்கரர்
2. இராமானுஜர்
3. மத்துவாச்சாரியாரும், அவரது சிந்தனைகளும்
4. ஸ்ரீ சைதன்யர், துளசிதாசர்
5. இராமானந்தர் , கபீர்தாஸர், மீராபாய்
6. இராஜாராம் மோகன் ராயும், பிரம்மசமாஜமும்
7. சுவாமி தயானந்தரும், ஆரிய சமாஜமும்
8. இராமகிருஷ்ணர்
9. சுவாமி விவேகானந்தர்
10. சுவாமி சின்மயானந்தரும், சின்மயா இயக்கமும்

**வினாப்பத்திரம் 3 ற்கான பாடத்திட்டம்**

**சைவசமய வரலாறு**

தென்னாசியா, தென்கிழக்காசியா என்பவற்றிலுள்ள சைவசமய வரலாறு பற்றி பரீட்சார்த்திகளிடமிருந்து ஒரு அறிவுபூர்வமான, தெளிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விரு பிராந்தியங்களிலும் உள்ள அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களோடு தொடர்புபடுத்திச் சைவசமய வளர்ச்சியைப் படித்தல் வேண்டும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சிகள் விசேட கவனத்தைப்பெறும். இலக்கியம், சாசனங்கள், பண்பாட்டுச்சின்னஙகள் என்பவற்றின் அடிப்படையிலே சமய வளர்ச்சிகளை விளக்குதல் வேண்டும்.

பாடவிதானத்தில் கீழ்வரும் விடயங்கள் மிக முக்கியமான அம்சங்களாகும்.

1. இதிகாச புராணங்களில் சைவம்
2. ஆதிகால தமிழர் சமுதாயத்தில் சைவம்
3. பல்லவர் காலத்துப் பக்தி நெறி
4. சோழர் காலத்திற் சைவசமயம்
5. காஷ்மீர் சைவம்
6. வீர சைவம்
7. சைவசித்தாந்த சாஸ்திரங்கள்
8. ஆதீனங்களின் சமயப்பணி
9. ஆறுமுக நாவலரும், சைவசமய மறுமலர்ச்சியும்
10. சுவாமி விபுலானந்தரும் இலங்கையில் இராம கிருஸ்ண இயக்கமும்

**வினாப்பத்திரம் 4 இற்கான பாடத்திட்டம்**

**பன்னிரு திருமுறைகள்**

இப் பாடத்திலே பன்னிரு திருமுறைகளில் விளக்கப்படும் சைவசமய சிந்தனைகள் , ஆன்மீக அனுபவங்கள் சமய தத்துவங்கள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்படும். பண்ணிசையின் வளர்ச்சி, கோயில்கள் அவற்றின் இயற்கைச்சூழல், அவற்றின் சமுதாயப்பின்னணி என்பன பற்றிய தெளிவான விளக்கம் அவசியமானது.

கீழ்வரும் விடயங்கள் மிகுந்த கவனத்திற்குரியவை.

1. பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும், அவற்றின் அடங்கன் முறையும்
2. நாயன்மார் வரலாறு
3. திருமுறைகளில் முப்பொருள்
4. திருமுறைகளிற் கோயில் வழிபாடு
5. பெரியபுராணம்
6. வினைப்பயனும் விமோசனமும்

**வினாப்பத்திரம் 5 இற்கான பாடத்திட்டம்**

**கோயில்களும் கலைகளும்**

இப்பாடத்திலே கோயில்கள் தொடர்பான கட்டடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை என்பவற்றில் விசேட கவனஞ் செலுத்தப்படும். பரீட்சார்த்திகள் இக்கலைகள் தொடர்பான சாஸ்திர நூல்களைப் பற்றியும் கோயிலமைப்புகள், பண்பாட்டுச் சின்னங்கள் என்பன பற்றியும் தெளிவான விளக்கம் பெற்றிருக்க வேண்டும். நாகரம், வேசரம், திராவிடம் என்னும் கலைப்பாணிகளைப் பற்றிய விளக்கம் அவசியமானது.

கோயில்களும் கலைகளும் என்னும் பாடம் பற்றிய வினாப்பத்திரம் கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்.

1)சிற்ப சாஸ்திரம் 2) நாட்டியசாஸ்திரம் 3)ஓவிய நூல் 4) இசைநூல்கள் 5)பண்பாட்டுச் சின்னங்கள்

**கட்டடக் கலை**

(1) கோயிலமைப்பின் பிரதான அம்சங்களும், அவற்றின் வளர்ச்சிகளும்

(2) பல்லவர் காலத்துக் கோயில்களும், சிற்பங்களும்

(3) சோழர் காலத்திற் திராவிட கலைப்பாணி

(4) விஜயநகர, நாயக்கர் காலத்துக் கோயில்கள்

**சிற்பக் கலை**

(1) கடவுட் படிமங்கள்

(2) தேவகோட்டச் சிற்பங்கள்

(3) கதைகளை விளக்கும் சிற்பங்கள்

(4) துவாரபாலகர் சிற்பங்கள்

(5) மனிதரின் உருவச் சிற்பங்கள்

(6) சமய குரவரின் படிமங்கள்

(7) அலங்கார வேலைப்பாடுகள்

**நடனக்கலை**

(1) பரதம், கதக்களி, கதக், யக்ஷ்கானம், குச்சுப்புடி, ஒடிஸி, மணிப்புரி ஆகிய நாட்டிய மரபுகள்

(2) கோயிற் சிற்பங்களும் நாட்டிய கரணங்களும்

(3) பரத நாட்டியத்தின் வரலாறும் நவீனகால வளர்ச்சிகளும்

**ஓவியக் கலை**

(1) ஓவியங்களும் கலைக் கோட்பாடுகளும்

(2) அஜந்தா ஓவியங்கள்

(3) பல்லவர் கால, சோழர் கால ஓவியங்கள்

(4) இராச புத்திரரின் ஓவியங்கள்

**இசைக் கலை**

(1) தேவாரப் பண்ணிசை

(2) கர்நாடக சங்கீத மரபின் வளர்ச்சி தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், சதாசிவ பிரம்மேந்திரர், சுவாதித் திருநாள் முதலியோர் மூலம் ஏற்பட்ட அபிவிருத்திகள்.

08-201